DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS. No. 53 /2022**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | ஆப்ரகாம் |
| Father's Name | : | வெங்கடாசலம் |
| Age | : | 37 |
| Religion | : | Chiristian |
| Calling | : | |
| Caste | : | General |
| Village | : | |
| Date | : | 12.02.2024 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜா ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் துணை மேலாளராக பணிபுரிகிறேன். நான் கேட்பு வரைவோலைகள் எண் 452808 மற்றும் 452823 சம்மந்தமாக சாட்சியம் அளிக்க எங்கள் வங்கிக்கு சாட்சி சம்மன் வந்தது என்றால் சரிதான். மேற்படி கேட்பு வரைவோலை எண் 452808 ரூ.13,50,000/– த்திற்கும் மற்றும் கேட்பு வரைவோலை எண் 452823 ரூ.9,50,000/– கொடுக்கப்பட்டது. அந்த ரூ.13,50,000/– மற்றும் ரூ.9,50,000/– எங்கள் வங்கியில் இருந்து ஜானகிராமன் என்பவருடைய கணக்கில் இருந்து ஐ.டி.எப்.சி முதல் வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளது. ஜானகிராமன் வங்கி கணக்கில் இருந்து கேட்பு வரைவோலை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வங்கி கணக்கு விவரம் **எக்ஸ்–1** ஆகும். அந்த பணம் ஐ டி எப்சி முதல் வங்கிக்கு பணம் அனுப்பப்பட்ட விவரம் கொண்ட எங்கள் வங்கியின் கணக்கு பட்டியல் **எக்ஸ்–2** ஆகும்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி எக்ஸ்–1 கேட்பு வரைவோலைகளானது ஐ டி எப் சி முதல் வங்கி பெயரில் எடுக்கப்பட்டது. தனிப்பட்ட நபர்கள் பெயரில் எடுக்கப்படவில்லை.

மேற்படி கேட்பு வரைவோலைகளானது ஜானகிராமன் கையில் கொடுக்கப்பட்டது.

மேற்படி வரைவோலைகள் வெவ்வேறு தேதிகளில் எடுக்கப்பட்டது.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH